# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி- 2025

பத்தாம் வகுப்பு

## மொழிப்பாடம் – தமிழ்

நேரம் : 15 நிமிடம் + 3.00 மணி

மதிப்பெண் : 100

பகுதி - I ( மதிப்பெண்கள் : 15 )

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15×1=15

1. மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் எனக் கூறியவர்
அ) திருமூலர் ஆ) ஔவையார் இ) சொக்கநாதப் புலவர் ஈ) ஐயூர் முடவனார்
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
4. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
5. தூக்கு மேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் தான் கலைஞர் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. இத்தொடருக்கான வினா எது?
அ) தூக்கு மேடை நாடகத்தில் நடித்தவர் யார்?
ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது?
இ) தூக்கு மேடை என்பது திரைப்படமா? நாடகமா?
ஈ) யாருக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது?
6. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
7. விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும் -இத்தொடரில் 'வேறார்' என்ற சொல் குறிப்பிடுவது
அ) வேற்று மொழியினர் ஆ) வேண்டியவர் இ) வேறு ஒருவர் ஈ) வெற்றியாளர்
8. ஊர்ப்பெயர்களின் மரூஉக்களில் பொருத்தமானதைத் தேர்க.
அ) புதுக்கோட்டை – புதுவை ஆ) புதுச்சேரி - புதுகை
இ) திருநெல்வேலி – திருச்சி ஈ) கும்பகோணம் – குடந்தை
9. கூரான் ஆயுதம் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதைத் தேர்க.
அ) பெரிய கத்தி ஆ) இரும்பு ஈட்டி இ) உழைத்ததால் கிடைத்த ஊதியம் ஈ) வில்லும் அம்பும்
10. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
11. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) உழவு,மண்,ஏர்,மாடு ஆ) மண்,மாடு,ஏர்,உழவு
இ) உழவு,ஏர்,மண்,மாடு ஈ) ஏர்,உழவு,மாடு,மண்

பாடலைப் படித்து வினாக்களுக்கு(12, 13, 14, 15) விடையளிக்க:-

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள 'வேழம்' என்ற சொல்லின் பொருள்
அ. ஆறு ஆ. யானை இ. தமிழ் ஈ. காடு

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

13. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களைத் தேர்க
அ. போவாரோ - வில்லாளோ ஆ. நெடுந்திரை - நெடும்படை
இ. தோழமை - ஏழமை ஈ. கடந்திவர் - கண்டு

14. இப்பாடலை இயற்றியவர்
அ. நப்பூதனார் ஆ. குமரகுருபரர் இ. அதிவீர ராம பாண்டியர் ஈ. கம்பர்

15. இப்பாடல் இடம் பெற்ற நூல் ___
அ. கம்பராமாயணம் ஆ. முல்லைப்பாட்டு இ. பரிபாடல் ஈ. சிலப்பதிகாரம்

பகுதி - II ( மதிப்பெண்கள் : 18 ) பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8
(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
ஆ. கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் என்று பாரதி பெருமைப்படுகிறார்.

17. "காய்மணியாகு முன்னர் காய்ந்தெனக் காய்ந்தேன்" உவமை உணர்த்தும் கருத்து யாது?

18. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக

19. வசன கவிதை - குறிப்பு வரைக

20. "கரப்பிடுப்பை இல்லார்" - இத்தொடரின் பொருள் கூறுக.

21. வினை - என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக

23. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.
அ) பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்
ஆ) இருக்கும் போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : உரைத்த

25. கலைச்சொற்கள் தருக. அ) Cultural values ஆ) Homograph

26. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்

27. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. இத்தொடரை இரு தொடர்களாக்குக.

குறிப்பு :- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா
சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் எழுதுக மணி, விலங்கு, மேகலை, பூ, பொன், மழை

28. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.
அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும் போது அம்மா வழியனுப்பியது.
( வழுவை வழாநிலையாக மாற்றுக )

பகுதி - III ( மதிப்பெண்கள் -18 )

பிரிவு - I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2×3=6

29. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" - வினவுவது ஏன்?

30. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு தந்து இன்றளவும் தொடர்வன நிகழ்த்துகலைகள். கிராமப்புற/சிற்றூர் மக்களின் கலை, அழகியல், பண்பாடு

ஆகியவற்றின் எச்சங்களாக இருப்பவை இவை. வடிவங்களைக் கொண்டு நிகழ்த்துகலைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) கரகாட்டம், காவடியாட்டம் - தலையில்/தோளில் கருவியைச் சுமந்தபடி ஆடுபவை

ஆ) மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம் - வேடம்கட்டி ஆடுபவை

இ) ஒயிலாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம் - குழுவாக ஆடுபவை

ஈ) தெருக்கூத்து, தோற்பாவைக் கூத்து - கதையைத் தழுவி ஆடும் ஆட்டங்கள்.

i) நிகழ்த்துகலைகள் என்றால் என்ன? ii) நிகழ்த்துகலை எத்தனை வகைப்படும்?

iii) வேடம் கட்டி ஆடும் ஆட்டங்கள் யாவை?

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

## பிரிவு - II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

(34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.)

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. கம்பர் பற்றி குறிப்பு வரைக

34. அ) "சிறுதாம்பு" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக. (அல்லது)

ஆ) "தண்டலை மயில்களாட" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

## பிரிவு - III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2×3=6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்" - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38. அ) பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை? (அல்லது)

ஆ) i) வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.


ii) நச்சப் படாதவன் செல்வம் - சொல்லுக்குப் பொருள் தருக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
(அல்லது)

ஆ. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

40. அ) கவிதையைத் தொடர்க ...

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி



(அல்லது)

ஆ) தமிழ்மொழிக்காக கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.



www.Padasalai.Net

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

41. வீட்டு எண் 21, காட்டு வளவு, தாரமங்கலம், சேலம் என்ற முகவரியில் வசிக்கும் இராஜாவின் மகள் கோகிலா என்பார் அருகிலுள்ள கிளை நூலகத்தில் உறுப்பினராக சேர விரும்புகிறார். மாணவர் தன்னை கோகிலாவாக எண்ணி கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர். அவர் எழுதியது தமிழின் சுவையை: அவர் எண்ணியது தமிழரின் உயர்வை: அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்து முடித்தபின் உங்கள் துறையின் அறிவைக் கொண்டு தமிழுக்குச் செய்யக் கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:-

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

குறிப்பு : குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோதுநெருப்புப் பந்துபோல்விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும்மீண்டும் சிறப்பாக ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

(i) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது? (ii) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

(iii) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

(iv) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக

(v) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி -V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3×8=24

43. அ) நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல், இசை,நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கி வரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்...... (அல்லது)

ஆ) இறைவன்,புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க. (அல்லது)

ஆ) ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.

குறிப்பு : வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்

45. அ) பண்டைத் தமிழர் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு பொதுக் கருத்தை எழுதுக. (அல்லது)

ஆ) கீழ்க்காணும் குறிப்பைப் பயன்படுத்திக் கட்டுரை வரைக.

(முன்னுரை - நெகிழிப்பை - தீமைகள் - தடுக்கும் முறைகள் - நாம் முன்னெடுக்க வேண்டியவை - முடிவுரை.)



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com